# ப்ராம்ப்ட்டன் நகரின் தெருக்கள் தூய்மைப்பணித் திட்டம் துவங்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மார்ச் 31, 2021) – இந்த வாரம் துவங்கி, குடியிருப்பு பகுதிகளில் உள்ள தெருக்களில் 2021 ஆம் ஆண்டுக்கான தெருக்கள் தூய்மைப்பணித் திட்டம் துவங்கும். ஏப்ரல் 6, செவ்வாய்க்கிழமை அன்று அனைத்துப் பகுதிகளிலும் இந்தத் தூய்மைப்பணி துவங்கும்.

இந்த வசந்த பருவத்தில், தெருக்களையும் கழிவுநீர்க் கால்வாய்களையும் தூய்மையாக வைத்திருக்க, நகரின் சாலைகளில் இருக்கும் மணல் மற்றும் குப்பைகள் அகற்றப்படுகின்றன. இது வெள்ளம் பாயும் கழிவுநீர்க் கால்வாய்களில் குப்பைகள் சேர்ந்து அடைத்துக்கொள்வதைத் தடுத்து, வாகன ஓட்டுனர்கள் மற்றும் பாதசாரிகளுக்கு பாதுகாப்பான மற்றும் தூய்மையான சாலைகளை வழங்குகின்றது.

- தார் பாவுதல் - பாலங்கள், நீர்பிடி அமைப்புக்கள், மற்றும் பக்கவாட்டு கழிவுநீர் கால்வாய்கள் உள்ளிட்ட நகருக்கு சொந்தமான சாலைகள் அனைத்தின் மீதும்
- கடின மேற்பரப்பு கொண்ட புலிவார்டுகள் மற்றும் பாதை பிரிப்பு கட்டுமானங்கள் (மீடியன்கள்)
- பனிக்காலத்தில் நகர நிர்வாகத்தினால் தூர்வாரப்பட்ட பக்கவாட்டு நடைபாதைகள் மற்றும் நடைப்பயண பாதைகள்
- ப்ராம்ப்ட்டன் நகர பொழுதுபோக்கு மையங்கள் மற்றும் பிற நகர வசதியமைப்பு கட்டிடங்களில் இருக்கும் வாகன நிறுத்த பகுதிகள்
- பக்கவாட்டு தடைகள் இல்லாத நாட்டுப்புற சாலைகள் தேவைக்கேற்ப கழுவப்படுகின்றன / சுத்தப்படுத்தப்படுகின்றன
- பக்கவாட்டு நடைபாதை தூய்மைப்படுத்தல்
- உப்பு பெட்டிகளையும் பனி வேலிகளையும் அகற்றுதல்
- புலிவார்டுகளில் பவர் வாஷிங் செய்தல்
- புல் படர்ந்த தரைப்பகுதிகள் பழுதுபார்த்தல்
- நகரத்தின் பூங்காக்கள் துறையுடன் இணைந்து குப்பைகளை எடுத்தல்

வசந்தகால தூய்மைப்பணித் திட்டத்தின்போது, குடியிருப்பு வாசிகள் செய்ய வேண்டி நினைவூட்டப்படும் விஷயங்கள்:

- திங்கள் முதல் வெள்ளி வரை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை குடியிருப்பு வீதிகளில் வாகனங்களை நிறுத்தக்கூடாது
- ஓடுபாதையில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்கள் தெருவில் நீட்டிக்கொண்டிருக்காமல் பார்த்துக் கொள்ளவும்
- குப்பை சேகரிப்பு செய்யப்படும் நாட்களில் குப்பைக் கொள்கலன்கள் மற்றும் மறுசுழற்சிக்கான பெட்டிகளை சாலையை விட்டு தள்ளி வைக்கவும்
- கூடைப்பந்து மற்றும் ஹாக்கி வலைகளை சாலையிலிருந்து போதுமான தூரம் தள்ளி வைக்கவும்
- தெருவில் தூய்மைப்பணி நடந்து கொண்டிருக்கும்போது, சிறிது இரைச்சலும் தூசியும் வரலாம், சற்றே பொறுத்துக்கொள்ளவும்.

- குளிர் மற்றும் மழை காலநிலையில் வீதி துப்புரவாளர்கள் செயல்படுவது சிரமம் என்பதால் சற்று பொறுமை காக்கவும். இந்த திட்டம்  செயல்படுவதற்கு வெப்பநிலை தொடர்ந்து பூஜ்ஜியத்திற்கு மேல் இருக்க வேண்டும்

வசந்த கால தூய்மைப்பணி திட்டத்தைப் பற்றி மேலும் அறிய மற்றும் உங்கள் அண்டைப்புறத்தில் என்ன நடக்கிறது என்பதைக் கண்டறிய இங்கு க்ளிக் செய்யவும்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca